DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 209/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : பொன்னுத்தாய் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th October 2025.

**3ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**முதல்விசாரணை:**

நான் தற்போது கரிவலம்வந்தநல்லூாரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கவிதா எனது தங்கை மகள். ஆஜர் ஆன 3 வது எதிரியை தெரியும். 1வது எதிரியை தெரியும். இறந்துபோன 2ம் எதிரியை தெரியும். அ.சா.1க்கும் 1வது எதிரிக்கும் 18 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்பு 1ம் எதிரியும், கவிதாவும் திருப்பூரில் வாழ்ந்து வந்தார்கள். திருமணம் நடந்தவுடன் மாங்குடையில் இருந்த எதிரிகள் வீட்டில் குடியிருந்தார்கள். அதற்கு பின்பு திருப்பூரில் குடியிருந்தார்கள். 1ம் எதிரி அ.சா.1யிடம் சண்டை போட்டார். எதற்காக சண்டை போட்டார் என்றால் எனக்கு தெரியாது. மாங்குடியிலிருந்து அ.சா.1 எனது வீட்டிற்கு வந்துசெல்வார். திருமணத்தின்போது அ.சா.1க்கு ரூ.70000

ரொக்கமும், 16 பவுன் நகையும் கொடுத்தோம். வியாபாரம் பார்ப்பதற்காக ரூ.1 லட்சம் 1வது எதிரி எங்களிடம் கேட்டார். அதற்கு என் தங்கை ரூ.1 லட்சம் கொடுத்தார். அதற்கு பின்பு 1வது எதிரி திரும்பவும் வியாபாரம் செய்வதற்காக ரூ.1 லட்சம் கேட்டார். இந்த சமயம் பணம் கொடுக்கவில்லை. எனக்கு வேறு எந்த விபரமும் வழக்கு பற்றி தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரிகள் அ.சா.1யிடம் கூடுதல் வரதட்சணை கேட்டு அடித்து கொடுமைப்படுத்தினார்கள் என்றால் சரிதான். அ.சா1க்கு சாப்பாடு கொடுக்காமல் 1வது எதிரி கேரளாவிற்கு சென்றுவிட்டார்என்றால் திருப்பூரில் இருந்தபோது 1வது எதிரி அவ்வாறு செய்தார். திருப்பூரில் இருக்கும் போது 1வது எதிரி அ.சா.1 யை கெட்டவார்த்தையால் அருவறுப்பாக பேசினார் என்றால் அது பற்றி நான் கேள்விப்பட்டேன். நான்போலீசார் விசாபரணையில் எதிரிகள் மூவரும் அ.சா1யிடமிருந்து நகைகளையும், பணத்தையும் பிடுங்கிக்கொண்டு அவரை பிச்சை எடுத்துபிழைத்துக்கொள்ளுமாறு கூறி அவரை 3 எதிரிகளும் வீட்டை விட்டுவிரட்டியதாகவும், கூடுதல் வரதட்சணை கேட்டு அ.சா.1க்கு சாப்பாடு கொடுக்காமல் கொடுமை செய்து கொன்றுவிடுவதாக 3 எதிரிகளும் மிரட்டியதாகவும், மருத்துவமனையில் வைத்து நான் கேள்விப்பட்டேன் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.1 கவிதா எனது தங்கை பச்சைக்கிளியின் மகள் என்றால் சரிதான். அ.சா.1ன் தந்தை பெயர் கொத்தாளமுத்து என்றால் சரிதான். மேற்படி கொத்தாளமுத்து ஆஜரான 3ம் எதிரியின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அ.சா.1 க்கும், 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தபிறகு அவர்களது

குடும்பத்தில் நடந்த பிரச்சனை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், அவர்கள் குடும்பத்தில் பிரச்சனை நடந்ததாக நான் கேள்விப்பட்டேன் என்றாலும் சரிதான். அ.சா.1 மற்றும் 1ம் எதிரி திருப்பூரில் இருந்தார்கள் என்றால் சரிதான். அ.சா.1க்கு தற்போது வேறொரு நபருடன் திருமணம் ஆகி திருப்பூரில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கு வேறு திருமணம் ஆனபிறகுதான் அ.சா.1க்கு திருமணமானது. அ.சா.1ன் 2வது கணவர் பெயர் என்னவென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 அவரது தற்போதைய கணவருடன் தொடர்பில் இருந்ததாக கூறி அ.சா.1க்கும் 1ம் எதிரிக்கும் இடையில் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனது தங்கை மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. திருமணமான 2-3 ஆண்டுகளிலே அ.சா.1க்கும், 1ம் எதிரிக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டு அவர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்தார்கள் என்றால் சரிதான். அ.சா.1ம், 1ம் எதிரியும் எந்த காலத்திலும் நான் கூறுவதுபோல சண்டையிட்டு கொள்ளவில்லை என்றாலும், அ.சா.1 கவிதாவுக்கு வேறு ஒரு நபருடன் தொடர்பு இருந்ததாக கூறி அ.சா.1ம், 1ம் எதிரியும் பிரிந்திருந்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அ.சா.1யிடம் இருந்து விவாகரத்து கோரி 2009ம் வருடம் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 தனது குடும்பத்தில் நடக்கும் பிரச்சனைகளை என்னிடம் தெரிவிப்பாரா என்றால் இல்லை. 1ம் எதிரிக்கு எனது தங்கை ரூ.70000 ரொக்கமும், 16 பவுன் தங்க நகையும் எந்த காலத்திலும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாததால் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**